Advertisements relating to Alcoholic Beverages

* 271 Q.—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that big advertisements relating to alcoholic beverages, attracting the attention of one and all, are appearing in the Press in our State; and

(*b*) if so, the action proposed to be taken by the Government in this matter?

மதுபானங்கள் பற்றிய விளம்பரங்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அனைவருடைய கவனத்தையும் ஈர்க்கக்கூடிய வகையில் மதுபானங்கள்பற்றிய பெரிய விளம்பரங்கள் நமது மாநிலத்தில் பத்திரிகைகளில் வெளியாகின்றன என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இதுபற்றி அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) செய்தித் தாள்களில் மது குறித்து விளம்பரங்கள் வெளியிடப்படுவதைத் தடுப்பதென திட்டமிடப்படவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, நம்முடைய அரசியல் சட்டத்திலேயே நம்முடைய மக்கள் மது அருந்துவதைத் தடை செய்வதற்கான காரியங்கள்பற்றி டிரக்டிவ் பிரின்சிபிலிலே போட்டிருக்கிறோம். அப்படி இருக்கும் போது பெரிய அளவிலே பத்திரிகைகளிலே அரைப் பக்கம், முழுப் பக்கம் விளம்பரம் வெளி வருகின்றது. பல முக்கிய இடத்திலே போடுகின்றார்கள். இப்படி வருகின்ற காரணத்தாலே, அதைப் பார்த்தே மது அருந்தலாம் என்ற எண்ணம் ஏற்பட்டு விடுகிறது. இதை மூதறிஞர் ராஜாஜி அவர்கள் கூட கண்டித்து பத்திரிகைகளிலே எழுதினார். அந்த அளவிலே அரசு கவனித்து ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ? வெளிநாடுகளிலே கூட இதைப் பார்த்து இப்படிச் சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, உறுப்பினருடைய கருத்தை நான் அப்படியே ஒப்புக்கொள்கின்றேன். இதைத் தடுப்பதற்கு ஏதாவது செய்ய முடியுமா என்பதைப்பற்றி ஆராய வேண்டும். அதுவரை

மாண்புமிகு உறுப்பினரவர்களின் கருத்தைப் பத்திரிகைக்காரர்கள் கூடுமான வரையிலே தங்கள் பத்திரிகையிலே போடாமலிருந்தால் உதவிகரமாக இருக்கும். வெளிவரும் விளம்பரங்கள் ஆபாசமாக இருக்குமானால், அவைகளை அகற்றிவிடுவது பற்றி அரசு ஆலோசிக்கும்.

திரு. கே. ராஜாராம்: மதுவிலக்குச் சட்டத்திலேயே இது ஒரு பகுதியாக ஏற்று அமல்படுத்தப்பட்டது. மதுவிலக்குச் சட்டம் ரத்தானதால் இதுவும் ரத்தாயிற்று. இதற்குத் தனிச் சட்டம் கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இருந்து ஒருவேளை ரத்து செய்யப் பட்டு விட்டதா, இல்லாவிட்டால் அதற்கு என்னென்ன செய்யலாம் என்பதை அறிந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

4-10 பிற்பகல் திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, பெரிய சாலைகளிலும் முக்கியமான தெருக்களிலும் 'இதோ சாராயக் கடை', 'இதோ கள்ளுக் கடை' என்று மனதை ஈர்க்கின்ற வகையில் பெரிய எழுத்துக்களில் போர்டுகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை அகற்ற சர்க்கார் ஏதேனும் செய்யுமா வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இப்படி கடைக்கு போர்டு போடுவதால், மனது ஈர்க்கப்பட்டது என்பதற்கு அர்த்தம் கிடையாது. திரு. ரா. கி. போன்றவர்கள் ஈர்க்கப்பட மாட்டார்கள். அப்படிப்பட்ட மன வலிமை வாய்ந்தவர்களை இந்த போர்டு ஈர்த்து விடாது. ஆனாலும் அரசு ஆலோசித்து தேவையான முடிவை மேற்கொள்ளும்.

Private School at Mandagappadi

* 261 Q.—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Manager of the private school at Mandagappadi of Vridhachalam Educational District has appealed to the Government, after the Government had ordered the cancellation of the recognition of the school due to its mal-administration and its subsequent confirmation by the High Court of Madras; and

(*b*) the action taken thereon by the Government?